African Cheetahs.

*286. Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether the Government of Tamil Nadu propose to purchase some African cheetahs?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : ஆப்ரிக்கா அல்லது பெர்சியா விலிருந்து இரண்டு சிறுத்தைப் புலிகள் இறக்குமதி செய்யப் படலாம் எனத் தமிழ்நாடு வன விலங்கு வாரியம் செய்த பரிவுரை யின் மேல் அதுகுறித்து இந்திய அரசுக்கு எழுதிக் கேட்கப்பட்டது. சிறுத்தைப் புலிகள் ஆப்பிரிக்காவில் மட்டுமே உள்ளன என்று அவர்கள் இந்த அரசுக்குத் தெரிவித்தனர். மேலும் இது குறித்து சோமாலியாவில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அவர்கள் கருத்து தெரிவித் திருந்தனர். எனினும், சோமாலியாவில் விலங்கினக் காட்சிச்சாலை எதுவுமில்லாததால் வெளிநாட்டு விலங்குகளை பரிமாற்றம் செய்து கொள்ள இயலாது என்று சோமாலியாவில் உள்ள தூதாகம் பதிலளித்தது. எனவே இது குறித்து மேற்கொண்டும் நடவடிக்கை தொடரப்படவில்லை.

திரு. கே. விநாயகம் : சிறுத்தைப் புலிகளின் எண்ணிக்கை நம் தேசத்தில் குறைந்துகொண்டே வருகிறது. அதைச் சுடக் கூடாது என்று நாம் எவ்வளவுதான் சட்டம் போட்டிருந்தாலும் வேட்டைக் காரர்கள் சுட்டுவிடுகிறார்கள். ஆகவே சிறுத்தைப் புலிக்காக தனிச் சரணாலயம் ஏற்படுத்தி அங்கே அவை இயற்கையில் நம்மைப்போல அதன் ஜனத்தொகை பெருக்கத்திற்கு வழி செய்ய ஏற்பாடு செய் வார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : தமிழ்நாட்டில் புலிகள் தான் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சரணாலயத்தில் இருக்கிறது. சிறுத்தைகள் கிடையாது. அதைப்பெறுவதற்காகத்தான் முயற் சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது வசதியில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி : சிறுத்தைப் புலிகளை அதிகப்படுத்து வதனால் பிரயோசனம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : பொதுவாக எல்லா மாநிலங் களிலும் மலைகளில் வன விலங்குகள் பாதுகாக்கப்படவேண்டும் என்று வைத்துக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் தான் சிறுத்தைப் புலியைக் கொண்டுவர முயற்சி செய்கிறோம். கிடைக்க வில்லை.

பறவைகள் உய்விடம்

*287 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

நமது மாநிலத்தில் பறவைகள் எந்தெந்த இடங்களில் பாது காக்கப்படுகின்றன ?

1970 மார்ச் 9]

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : நீர்நிலைப்பறவைகளுக்கான உய்விடங்கள் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள அரப்பாக்கம், செம்பரம்பாக்கம் ஆகிய இடங்களிலும், வடஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சாவேரிப்பாக்கத்திலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் காழ்வேலிச் சதுப்பு நிலம், திண்ணகரம், வீராணம் ஆகிய இடங்களிலும், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கோடிக்கரை, முத்துப்பேட்டை, தலைஞாயிறு ஆகிய இடங்களிலும், மதுரை மாவட்டத்தில் வைகை அணையிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் நென்மேனியிலும், திருநெல்வேலி மாவட்டதில் குந்தக்குளம், மூன்றடைப்பு, கங்கைகொண்டான், சீதாபரப்பநல்லூர் ஆகிய இடங்களிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தேவராயன் ஏரியிலும் உள்ளன. இந்த உய்விடங்களிலுள்ள பறவைகள், இனப்பெருக்கக் காலத்தில் குறிப்பிட்ட தொலைவிற்குள் சுடப்படுவதினின்றும், கண்ணிவைத்துப் பிடிக்கப்படுவதினின்றும் பாதுகாக்கப்படுகின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தில் வேடந்தாங்கல் என்ற இடத்திலும், நீர்நிலைப்பறவைகளுக்கான உய்விடம் ஒன்று உள்ளது. கோயம்புத்தூர் தெற்குக் கோட்டத்திலுள்ள அமராவதி நீர்த்தேக்கம், கோயம்புத்தூர் மத்தியக் கோட்டத்திலுள்ள பவானிசாகர் நீர்த்தேக்கம் ஆகிய பகுதிகளைச் சுற்றி 1.6 கி. மீட்டர் தொலைவிற்குள் பறவைகளைச் சுடுதலும், பொறி வைத்துப் பிடித்தலும் தடை செய்யப்பட்டுள்ளன.

திரு. என். கிட்டப்பா : வேடந்தாங்கலில் பல்வேறு நாட்டுப் பறவைகள் வருகின்றன என்று சொல்லப்படுகிறது. கடந்த இரண்டாண்டுகளாக அந்தப் பறவைகள் அதிக அளவில் வரவில்லை என்று சொல்லப்படுகிறதே, அப்படி வருகின்றவை வலதுசாரி நாட்டைச் சார்ந்தவைகளா ? இடதுசாரி நாட்டைச் சார்ந்தவைகளா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : சென்ற ஆண்டு வறட்சியின் காரணமாகத்தான் வரவில்லை. இவ்வாண்டு பல நாடுகளில் இருந்து இப்போதே வந்திருக்கின்றன. மனிதசமுதாயத்தில் வேற்றுமையைக் களையும் முயற்சி வெற்றிபெறாவிட்டாலும் பறவையினத்தில் அவை ஒன்றாகவே நமக்குச் சவாலிட்டு உலவுகின்றன.

***288. Q.—Thiru K. VINAYAKAM :** Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Government of Tamil Nadu have made Kodikkarai Reserve forest in Thanjavur district into a sanctuary; and

(b) the rare birds that are found there?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் கோடிக்கரை ஒதுக்கக் காடு என்று எந்த ஒதுக்கக் காடும் இல்லை. அங்குள்ள ஒதுக்கக் காட்டின்பெயர், கோடியக்காடு ஒதுக்கக் காடு ஆகும். இந்த ஒதுக்கக் காட்டின் அருகில் உள்ள கிராமமே,